DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.16

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ஆர். ராஜ்குமார் சாமுவேல் | Caste: | |
| Father's Name: | எஸ். ராஜதுரை | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.11.2023.

(A6, A8 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. Others present.)

முதல் விசாரணை

நான் தற்போது சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் உதவி ஆணையராக பணிபுரிகிறேன். கடந்த 22.03.2020ம் தேதி பகல் 13.30 மணிக்கு தேவிப்பட்டிணம் காவல்நிலைய ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது தேவிப்பட்டிணம் வடக்கு தெருவைச் சேர்ந்த காளியப்பன் மகன் வைரவகேசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று தேவிப்பட்டிணம் காவல்நிலையக் குற்ற எண். 67/2020 பிரிவு 147, 307, 302 IPC and sec 3(1)(r) of SC/ST (POA) Act, 1989ன் படி வழக்கு பதிவு செய்தேன். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலை பட்டியலிட்ட ஜாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் சிறப்பு நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 21**. இதுசம்பந்தமாக இராமநாதபுரம் டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் A1, A2, A6, A7 தரப்பு குறுக்கு விசாரணை** :-

தேவிப்பட்டிணம் காவல்நிலையத்திற்கும் இந்நீதிமன்றத்திற்கும் இடையே சுமார் 15 கி.மீ இருக்கும். இருசக்கர வாகனத்திலோ, போலிஸ் ஜீப்பிலோ நீதிமன்றத்திற்கு வந்து சேர சுமார் 45 நிமிடங்கள் ஆகும். புகார் மனுவை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது. புகாரில் காரின் பெயரை குறிப்பிடுகையில் " பரிஸ்கா" என்று எழுதி பின்னர் அதை அடித்துவிட்டு அதற்கு மேலே ஆங்கிலத்தில் " Crdoda ” என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் அந்த வாகனத்தை எதிரி சரவணன் ஓட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சரவணனின் ஊர் பெயரும் எழுதப்பட்டு பின்னர் வெள்ளை மையால் அழிக்கப்பட்டு "பெருங்குளத்தைச் சேர்ந்தவர்" என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் இறந்த நபர் இராமநாதபுரம் சென்று திரும்பி வந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சக்கரவாளநல்லூர் எதிர்புறம் உள்ள பஸ்ஸ்டாப்பில் காளிதாஸ், ஆதிமூலம், முனியாண்டி ஆகிய மூன்று நபர்களும் நின்று கொண்டிருந்ததாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரரான வைரவகேசு, ஆதிமூலம் தனக்கு கைபேசியில் சம்பவத்தைப் பற்றி சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 6,7,8 எதிரிகளின் பெயர்கள் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் காலதாமதமாக கொடுக்கப்பட்டதன் காரணம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில்"உண்மையுள்ள" என்ற வார்த்தைக்கும் புகார்தாரரின் கையொப்பத்திற்கும் இடையே ஒரு இடைவெளி உள்ளது என்றால் இல்லை. இடைவெளி உள்ளது என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைப் பேப்பரில்

கையொப்பம் பெறப்பட்டு பின்னர் பூர்த்தி செய்து கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் கொடுப்பதற்கு முன்பே வேறொரு புகார் கொடுக்கப்பட்டு அது மறைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் என்னிடம் புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

**எதிரி A3 தரப்பு குறுக்கு விசாரணை** :-

நான் அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்து முடிக்கும்போது பகல் 2 மணி. அச்சு முதல் தகவல் அறிக்கையில் எத்தனை மணிக்கு அது தயாரிக்கப்பட்டது என்று சொல்லப்படவேண்டும் என்றால் அதை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. துரித முதல் தகவல் அறிக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். நான் இரவு 7 மணிக்கு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 5 மணி நேரம் காலதாமதமாக அனுப்புவதற்கு காரணம் என்ன என்று கேட்டால் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் காரணமாக முதல் தகவல் அறிக்கை அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டது. என்னுடைய மேலதிகாரிகளை ஆலோசனை செய்து தயாரித்ததால்தான் அந்த காலதாமதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன அரவிந்தன் பின்தலையில் அடிபட்டு இரத்தம் வடிந்த நிலையில் மயக்கமாய் கிடந்ததாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 26.07.2020 ல் நான் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக இருந்தேனா என்றால் அது சரியாக ஞாபகமில்லை. அன்றைய தேதியில் அமீர்கான் என்பவர் தேவிப்பட்டிணம் காவல் நிலையத்திற்கு வந்து வழக்கு கொடுத்தாரா

என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கை நான் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து அது இராமநாதபுரம் JM I. நீதிமன்றத்தில் CC.No. 88/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் 27.07.2020 அன்று அ.சா.1 வைரவகேசு காவல்நிலையத்தில் ஆஜராகி அமீர்கான் என்பவர்தான் அரவிந்தனை கொலை செய்ததாக புகார் கொடுத்தார் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. அந்த சமயத்தில் நான் டிஎஸ்பி பயிற்சிக்காக சென்றிருந்தேன். நான் அவர் புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் வைரவகேசு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl.O.P(MD)No. 10475/2020 என்ற வழக்கில் என்னை எதிர்மனுதாரராக சேர்த்து ஒரு மனு தாக்கல் செய்தார் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. SC/ST Rule 7 ன் படி இத்தகைய வழக்குகளை விசாரிப்பதற்கு மாவட்ட காவல்கண்காணிப்பாளரோ, அவருக்கு மேல் உள்ள அதிகாரியோ விசாரணை அதிகாரியை நியமனம் செய்ய வேண்டும் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் இன்னொரு நகலை இராமநாதபுரம் டிஎஸ்பிக்கு அனுப்பினேன். அது என் அதிகார வரம்பை மீறிய செயல் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பலதரப்பினர் அழுத்தத்தின் காரணமாக முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி A8 தரப்பு குறுக்கு விசாரணை** :-

காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பு அதிகாரியாக ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் அல்லது முதல் நிலை காவலர் நியமிக்கப்படுவார்கள் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யக்கூடிய வழக்கில் புகார் பெறப்பட்டால் உடனடியாக வழக்கு பதிவு செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

புகாரில் தேவிப்பட்டிணம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனை கொண்டு செல்லும் வழியிலேயே அரவிந்தன் இறந்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக முதல் தகவல் சார்பு ஆய்வாளர் பெற்று அது மறைக்கப்பட்டு பின்னர் சாதிக்காரர்கள், கட்சிக்காரர்கள் ஆகியோர் தலையிட்டதன் பேரில் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை A4, 5 ஆகியோர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- B.C.Gopinath
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.12/2020**

அ.சா.17

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | கே. வெள்ளைத்துரை | Caste: | |
| Father's Name: | கே. கிருஷ்ணன் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.11.2023

(A6, A8 absent. Petition u/s. 317 Crpc filed and allowed. Others present.)

முதல் விசாரணை

நான் தற்போது சென்னையில் உள்வட்ட பாதுகாப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் இராமநாதபுரம் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளராக 29.11.2019 முதல் 12.06.2021 வரை பணிபுரிந்து வந்தேன். அப்போது தேவிப்பட்டிணம் காவல்நிலைய குற்ற எண் 67/2020 என்ற வழக்கினை மாவட்ட காவல்கண்காணிப்பாளரின் 23.03.2020 ம் தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி விசாரணை அதிகாரியாக நான் நியமனம் செய்யப்பட்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.22**. ஆனால் 22.03.2020 அன்றே அந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட விவரம் எனக்கு கிடைத்தது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை தேவிப்பட்டிணம் காவல் ஆய்வாளர் ராஜ்குமார் சாமுவேல் என்பவரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கையாக எனக்கு கொடுத்தார். பிறகு 22.03.2020 ம் தேதி மதியம் 2.15 மணிக்கு சம்பவ

இடமான சக்கரவாளநல்லூர் விலக்கு அருகில் சாட்சிகள் விஜயகுமார், கருப்பையா ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். நான் தயார் செய்த வரைபடம் **அ.சா.ஆ. 23**. சம்பவ இடத்தில் இருந்த TN 65 AK 6018 என்ற கருப்பு கலர் பல்சர் பைக்கை மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் அங்கிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் இறந்துபோன அரவிந்தன் பிரேதத்தின் மீது மதியம் 3.15 மணி முதல் 4.30 மணி வரை பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ. 24**. பின்னர் த.கா. 1553 ஜெயசேகர் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். 22.03.2020ம் தேதி சம்பவ சாட்சிகளான வைரவகேசு, பூமிராஜன், ஆதிமூலம், காளிதாஸ், முனியாண்டி, விஜயகுமார், கருப்பையா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 23.03.2020 அன்று காயம்பட்டு சிகிச்சையில் இருந்த கல்யாணக்குமார் என்பவரை விசாரணை செய்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 23.03.2020 அன்று அதிகாலை 5 மணிக்கு எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி உடைச்சியார் வலசை விலக்கு ரோட்டில் எதிரிகளான சரவணன், கார்த்திக், சேதுபதி ஆகியோரை காரணம் கூறி ஜெகன்நாத பூபதி, பரிமளாதேவி ஆகியோர் முன்னிலையில் கைது செய்தேன். பின்னர் எதிரி சரவணன் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரியான சரவணன் சம்பவ இடத்தை அடையாளம் காட்டியும் சம்பவத்திற்கு பயன்படுத்திய மறைத்து

வைத்திருந்த காரை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். நதிப்பாலத்திற்கு வடக்கில் ரோட்டிற்கு மேற்கில் உள்ள கருவக்காட்டில் வைத்து எதிரி பதிவு எண் இல்லாத Hyundai Creta வெள்ளை நிற காரை ஆஜர் செய்தார். எதிரி எடுத்து ஆஜர் செய்ததை சாட்சிகளான ஜெகன்நாத பூபதி மற்றும் பரிமளாதேவி ஆகியோர் முன்னிலையில் காலை 7 மணி முதல் 7.30 மணி வரை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். பின்னர் எதிரிகள் கூட்டு சேர்ந்து திட்டமிட்டு வாகனத்தின் மூலம் மோதி கொலை செய்தார்கள் என்று தெரியவந்ததால் எதிரிகள் மீது பிரிவு 120 B IPC and sec 3(1)(r), 3(2)(v), 3(2)(va) of SC/ST (POA) Act ன் படி சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 25**. இவ்வழக்கில் இறந்த நபரும், காயம்பட்ட நபரும் சென்ற TN 65 AK 6018 என்ற கருப்பு கலர் பல்சர் பைக்கையும் எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய பதிவு எண் இல்லாத Hyundai Creta வெள்ளை கலர் காரையும் நீதிமன்றத்திற்கு Form 91 மூலம் அனுப்பி வைத்தேன். பின்னர் 14.04.2020 அன்று இறந்த நபர், காயம்பட்ட நபர் மற்றும் எதிரிகளுக்கு சாதிச்சான்றிதழ் வேண்டி இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். 19.05.2020 ம் தேதி எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி தலைமறைவு எதிரிகளை தேடி வந்தபோது அழகன்குளம் நஜியா மெட்ரிக் பள்ளி பக்கம் உள்ள பஸ்ஸ்டாப்பிற்கு அருகில் வைத்து எதிரிகள் பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணா , மகேந்திரன், பாஸ்கரன் ஆகியோரை விசாரணை செய்து சம்பவத்தை ஒத்துக்கொண்டதன் அடிப்படையில் வரவழைக்கப்பட்ட தர்மராஜ், முனியசாமி ஆகியோர் முன்னிலையில் எதிரி பாலா என்ற பாலமுரளிகிருஷ்ணா தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் நீதிமன்ற காவலுக்கு எதிரிகளை அனுப்பி வைத்தேன். மேலும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான தர்மராஜ், முனியசாமி ஆகியோர்களிடம் தனித்தனியாக விசாரணை வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 02.06.2020 அன்று இவ்வழக்கில் காயம்பட்ட கல்யாணக்குமாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்தியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி கல்யாணக்குமார் தன்னிச்சையாக மருத்துவமனையில் இருந்து சென்றுவிட்டதால் No opinion என்று காயச்சான்று வழங்கினார். பின்னர் 01.07.2020 அன்று எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரி சதீஸ்கண்ணன் என்ற கதீஸ்புறாவை காரணம் கூறி உச்சிப்புளி பஸ்ஸ்டாப்பில் வைத்து கைது செய்து அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 28.07.2020 அன்று வழக்கின் தடய சொத்துக்களான கிரே கலர் டிராக் சூட், இரத்தம் படிந்த கிரே கலர் டிராக் பேண்ட் இரண்டு கருப்பு கோடுகள், இரத்தம் படிந்த சிவப்பு கலர் கலந்த டிரவுசர், இரத்தம்படிந்த வெள்ளை கலர் கட் பனியன், இரத்தம்படிந்த சிவப்பு கலர் முழுக்கை சட்டை ஆகியவற்றை த.கா 947 உலகநாதன் என்பவர் மூலம் நீதிமன்றத்தில் இருந்து பெற்று இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி தடய பொருட்களில் இரத்தம் கண்டறியப்பட்டது என்று 28.08.2020 தேதியிட்ட அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கை **அ.சா.ஆ. 26**. மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து மேற்படி சொத்துக்களில் இருந்த இரத்தம் A வகை இரத்தம் என்று 17.10.2020 தேதியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அந்த அறிக்கை **அ.சா.ஆ. 27**. 04.08.2020 அன்று இறந்துபோன அரவிந்தனின் பிரேதத்தில் இருந்து

சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை த.கா. 947 உலகநாதன் என்பவர் மூலம் நீதிமன்றம் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 04.10.2020 அன்று சாதிச்சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் முருகவேலை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அவர் கொடுத்த 01.06.2020 தேதியிட்ட அறிக்கையில் இறந்துபோன அரவிந்தன், காயம்பட்ட கல்யாணக்குமார், புகார்தாரர் வைரவகேசு ஆகியோர் இந்து பள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், எதிரிகள் அட்டவணையில் குறிப்பிட்ட சாதிகள் அல்லாத வகுப்பினர் என்று குறிப்பிட்டிருந்தார். பின்னர் 04.10.2020 அன்று வழக்கின் சாட்சிகளான வைரவகேசு, கல்யாணக்குமார், பூமிராஜன், ஆதிமூலம், காளிதாஸ், முனியாண்டி ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரிகள் பயன்படுத்திய காரின் உரிமையாளர் கார்த்திகேயன் என்ற அருண்கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பிரேத பரிசோதனை சான்று வழங்கிய மருத்துவர் பிரித்தா , பகுப்பாய்வு அறிக்கை வழங்கிய மருத்துவர் விஜயலதா, விரைவு முதல் தகவல் அறிக்கை ஒப்படைத்த காவலர் சிவாஜி, வழக்கு பதிவு செய்த காவல் ஆய்வாளர் ராஜ்குமார் சாமுவேல் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது விசாரணையில் மேற்படி எதிரிகளின் 1 வது எதிரியின் குற்றமுறு சதி செயலுக்கு, 2 முதல் 8 வரை உள்ள எதிரிகள் உடந்தையாக இருந்தார்கள் என்று தெரியவந்ததால் சட்டப்பிரிவான 147, 120B, 307, 302 IPC and sec 3(1)(r), 3(2)(v), 3(2)(va) of SC/ST (POA) Act உடன் 109 IPC யையும் இணைத்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து இறுதி அறிக்கையுடன் அனுப்பி வைத்தேன்.

அந்த பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ. 28**. எதிரி இலசு என்ற இளையராஜா தலைமறைவாக இருந்ததால் அவரை தலைமறைவு எதிரியாக காண்பித்து 06.10.2020 அன்று மேற்படி பிரிவுகளின் கீழ் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சி கல்யாணக்குமார் என்னுடைய விசாரணையில் 21.03.2020 அன்று மாலை நானும் அரவிந்தனும் இராமநாதபுரம் சென்றுவிட்டு திரும்பி வரும்போது எதிரிகள் அனைவரும் பதிவு செய்யப்படாத Hyundai Creta வெள்ளை நிற காரில் பின் தொடர்ந்து வந்து பைக்கில் மோதியதால் நானும் அரவிந்தனும் தூக்கி எறியப்பட்டோம். அதில் எனக்கு ஊமைக்காயமும், அரவிந்தனுக்கு பின்தலையில் அடிபட்டு பேச்சு மூச்சின்றி கிடந்தார். அப்போது அங்கிருந்த ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர் என்னை தூக்கி பார்த்தபோது ஆதிமூலத்திடம் மேற்படி சங்கதிகளை சொன்னேன் என்று எனது விசாரணையில் சொன்னார். அதேபோல் பூமிராஜன் இரவு 10.40 மணியளவில் அவரது அண்ணன் வைரவகேசு அழைத்தன் பேரில் சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பிற்கு சென்று பார்த்தபோது அரவிந்தன் காரில் மோதி பேச்சு மூச்சின்றி கிடந்தார் . கல்யாணக்குமாருக்கு ஊமைக்காயம் ஏற்பட்டிருந்தது என்றும், காயம்பட்டவர்களை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றது பற்றியும், அ.சா.1 22.03.2020 அன்று பகல் 1.30 மணியளவில் கொடுத்த புகாரில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தது பற்றியும் சொன்னார். அதேபோல் சாட்சிகள் ஆதிமூலம், முனியாண்டி, காளிதாஸ் ஆகியோர் சொந்த வேலையாக இராமநாதபுரம் செல்வதற்காக சக்கரவாளநல்லூர் பஸ்ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது இராமநாதபுரத்திலிருந்து மிகவேகமாக வந்த வெள்ளை நிற Hyundai Creta கார் முன்னே சென்ற

வைரவகேசு மகன் அரவிந்தன் மற்றும் கல்யாணக்குமார் சென்ற பல்சர் பைக்கில் மோதியதால் பைக்கில் இருந்த இருவரும் தூக்கி வீசப்பட்டு விழுந்தார்கள் என்றும் நான் ஓடி சென்று தூக்கி பார்த்தபோது கல்யாணக்குமாருக்கு ஊமைக்காயம் இருந்தது என்றும், நாங்கள் சத்தம் போட்டவுடன் காரில் மோதியவர்கள் பார்த்துவிட்டு தேவிப்பட்டிணம் நோக்கி சென்றுவிட்டு மீண்டும் இராமநாதபுரம் நோக்கி சென்றுவிட்டார்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

**எதிரிகள் A1, A2, A6, A7 தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தில் இருந்தபோது இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை என்னிடம் வழங்கப்பட்டது. பகல் 2 மணிக்கு என்னிடம் முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டது. தேவிப்பட்டிணம் காவல்நிலையம் இராமநாதபுரம் உட்கோட்டத்தை உள்ளடக்கியதுதான். முதல் தகவல் அறிக்கை நான் பார்வையிடுவதற்கு முன்பு இந்த வழக்கு பற்றிய விவரங்கள் தெரியுமா என்று கேட்டால் தெரியும். எப்போது தெரியும் என்று எனக்கு ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் பார்வையிடுவதற்கு முன் சம்பவ இடம் சென்று பார்வையிடவில்லை. முதல் தகவல் அறிக்கை என்னிடம் கொடுக்கப்பட்டபிறகு நான் படித்து பார்த்தேன். முதல் தகவல் அறிக்கையில் தேவிப்பட்டிணம் காவல்நிலையத்தைச் சேர்ந்த சார்பு ஆய்வாளர்தான் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக உள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு தான் புகார்தாரர் வைரவகேசு அங்கு வந்ததாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சார்பு ஆய்வாளர் காயம்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அனுப்பும்போது புகார்தாரர் அங்கிருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

சரிதான். பெருங்குளத்தைச் சேர்ந்த சரவணன் என்பவர் வண்டியை ஓட்டியதாக புகாரில் குறிப்பிட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் 2வது எதிரி சரவணனின் ஊர் துத்திவலசை என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பெருங்குளத்திற்கு சென்று அங்கு சரவணன் என்று ஒருவர் உள்ளாரா என்று நான் விசாரிக்கவில்லை. காயம்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அனுப்பிய உதவி ஆய்வாளர் யார் என்று அடையாளம் கண்டு அவரை விசாரித்து இவ்வழக்கில் ஒரு சாட்சியாக காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. அந்த உதவி ஆய்வாளர் யார் என்று நான் விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன் என்பதும் அது வழக்கிற்கு விரோதமாக இருந்தது என்பதால் அது மறைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவரை வழக்கில் சாட்சியாக சேர்த்தால் வழக்கின் உண்மை தெரிந்துவிடும் என்று நான் அவரை வேண்டுமென்றே சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் தகவல் அறிக்கை பார்த்தவுடன் உடனடியாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் செல்லவில்லை. பிரேத விசாரணை இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் செய்தேன். பிரேத விசாரணை செய்வதற்கு முன்பாக இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரித்தேனா என்றால் பஞ்சாயத்தார்களை விசாரித்தபிறகு மற்ற சாட்சிகளை விசாரித்தேன். பஞ்சாயத்தார்கள் யாரும் கண்ணுற்ற சாட்சிகள் அல்ல என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு அனுப்பிய பிரேத விசாரணை அறிக்கையில் 4 பக்கங்கள் மட்டுமே உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் நான் அனுப்பிய பிரேத விசாரணை அறிக்கை 8 பக்கங்கள் கொண்டது.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்திவைக்கப்பட்டது.**

Sd/- B.C.Gopinath

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)